திரு. நா. காசிராமன் : தத்தனேரியில் கட்டப்பட்ட ஐ.டி. ஹாஸ்பிட்டல் எந்த ஆண்டு கட்டப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது.

உப்பனாற்றின் குறுக்கே பாலம்

*** 205 வினா.—திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சீர்காழி தாலுகாவில் திருநகரி-நல்லூர் ரோடு என்ற தொடர்ச்சியைத் தடுக்கின்ற உப்பனாற்றின் குறுக்கே பஸ் போக்கு வரத்துக்குரிய அளவில் ஒரு பாலம் கட்ட பரிசீலனை செய்து, மதிப்பீடு தயார் செய்து இருப்பதை நடப்பு ஆண்டிலேயே நடைமுறைக்குக் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் நிச்சயித்துள்ள முக்கியத்துவப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுதான் "இதர சாலைகளின்" கீழ் புது வேலைகள் துவங்க அரசு அனுமதி அளிக்கிறது. மங்கமடம் திருநகரி-நல்லூர் சாலையில் 3-வது மைல் 1-வது பர்லாங் பக்கம் ஒரு பாலம் கட்டுவதென்றும், அதைப் புது வேலைகளில் 3-வதாகச் சேர்ப்பதென்றும் கிழக்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மன்றம் சிபார்சு செய்துள்ளது. மற்றும், இந்த வேலை நான்காவது நகல் திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. 'இதர சாலைகளில்' தற்சமயம் 212 வேலைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. கேள்வியில்சொல்லும் வேலையை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை அனுமதித்த பிறகுதான் இந்த வேலையை எடுத்துக்கொள்ள இயலும்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தச் சாலை பழைய பேரும் புகழும் பெற்ற காவிரிப்பூம்பட்டிணத்திற்குத் தொடர்ச்சியாக இருப்பதினால் அப்படிப்பட்ட சரித்திரப் புகழ்பெற்ற இடத்தைச் சீரமைக்கவும், ஒழுங்குப்படுத்தவும் இந்தப் பாலம் மிக முக்கியமானதாக இருக்கிறது. இது கட்டப்படவில்லை என்றால் 18 மைல் சுற்றளவிற்குச் சுற்றிப்போக வேண்டியிருப்பதால் இதற்கு முதல் சலுகை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : காவேரிப்பூம்பட்டிணத்தைப் புதுப்பிக்கிற முயற்சியை மேற்கொள்ளுகிற நேரத்தில், அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளுமானால் நிச்சயமாகப் போவதற்குள்ள வழியைத் தேடித்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

குறிப்பு:—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்களும், இரண்டு அவையுரிமைக் கேள்விகளும் இருக்கின்றன. இவைகளில் முதலில் ஒற்றிவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தையும், மாண்புமிகு அங்கத்தினர் திரு. கோதண்டராமன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தீர்மானத்திற்கு நான் இசைவதற்கான காரணங்களை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

சென்னை நகரில் தொடர்ந்து தீ விபத்துக்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir, I have given notice of the following adjournment motion :—

'That the House do stand adjourned to discuss a matter of public importance viz., the continuous fire accidents taking place daily—for the fourth day in succession—in Madras City, the causes for the same, the panic created thereby to the poor and wage earning people in the City and the inability of the Government to allay the panic, stop accidents, round up unsocial elements and restore Law and Order.' கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை நான் பிரேரேபிப்பதுடன் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ளுகிறேன், இதை நான்காவது தடவையாக இந்தச் சபையில் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்குபோனாலும் சட்டம் அமைதியோ சமாதானமோ இல்லை என்பது தெரிய வருகிறது. வெளியில் மக்கள் நடமாடுவதற்குக் கூடப் பயப்படுகிறார்கள். பலவிடங்களில் சிலர் மக்களைக் காப்பதாகச் சொல்லிக் கொண்டு மிகவும் அக்கிரமமான செயல்களில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். நேற்று ஓர் இடத்திற்கு சென்றபோது நான் தடுக்கப்பட்டேன், காரிலே செல்லும்போது எங்கே போகிறீர்கள் என்று கேட்கும் நிலை இருப்பதால் சாதாரண நடுத்தர மக்கள், வீடுகளுக்கு வேலை புரிய வரும் பெண்கள் இவர்கள் நடமாட பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் சர்க்கார் எந்த வித நடவடிக்கைகளையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாததுடன் ஏதோ பல பல காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை.

* * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதிக்குண்டான காரணங்களைக் காட்டுங்கள்.

* பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.